**EASTERN UNIVERSITY, SRI LANKA**
**FACULTY OF COMMERCE & MANAGEMENT**
**EXTERNAL DEGREE PROGRAMME**
**1st Year 2nd Semester Examination in Bachelor of Business Management**
**2019/2020 [January/February, 2023] – [Proper/Repeat]**

# BMF 1092 - SOCIAL HARMONY & SRI LANKAN STUDIES

*எல்லா வினாக்களுக்கும் விடை தருக.* *நேரம்: இரண்டு மணித்தியாலம்.*

## PART I

Q1. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

i. இலங்கையில் சமாதான நீதவானை நியமிப்பது யார்?

ii. எந்த ஆண்டு இலங்கையில் மரண தண்டனை இல்லாதொழிக்கப்பட்டது?

iii. இலங்கையின் இறுதி ஆளுநராகப் பதவி வகித்தவர் யார்?

iv. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் திட்டத்தின் 7ஆவது திருத்தத்தின் மூலம், இலங்கையில், 25 ஆவது நிர்வாக மாவட்டமாக உருவாக்கப்பட்ட மாவட்டம் எது?

v. இலங்கையில், எந்தவொரு அமைச்சோடும் சாராமல், தனித்து இயங்கும் அரச திணைக்களம் யாது?

vi. சிறுவர்களை வேலைக்கமர்த்துவதற்காக, இலங்கைத் தொழிலாளர் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள மிகக் குறைந்த வயது என்ன?

vii. இலங்கையில், பிறப்பு இறப்புப் பதிவை அறிமுகப்படுத்திய அந்நியர் யார்?

viii. இலங்கையில் ஆட்கொணர்வு மனுவை வழங்கும் நீதிமன்றம் யாது?

ix. எத்தனையாம் ஆண்டு, இலங்கை மத்திய வங்கி தாபிக்கப்பட்டது?

x. ஊழல் மற்றும் மோசடி தொடர்பான தகவல்களை எந்த அவசர இலக்கத்திற்கு நீர் வழங்குவீர்?

xi. இலங்கையில், நீர்த்தேக்கங்களைப் பெருமளவில் கொண்டுள்ள மாகாணம் எது?

xii. இலங்கையில் மது அருந்துவதற்கான சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள மிகக் குறைந்த வயது என்ன?

xiii. சமூக மாற்றம் என்றால் கருதப்படுவது யாது?

xiv. பிறழ்வான சமூக நடத்தைக்கு ஏதுவான காரணிகள் இரண்டினைத் தருக.

xv. இனங்களுக்கு இடையிலான புரிந்துணர்விற்கு இரண்டு உதாரணங்களைக் கூறுக.

**(15×01 = 15 புள்ளிகள்)**

## PART II

**Q2.**

i. 1978 ஆம் ஆண்டு இலங்கையில், அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கையின் தாக்கங்களைச் சுருக்கமாகத் தருக. **(12 புள்ளிகள்)**

ii. இலங்கையின் பெறுமதிசேர் வரி அதிகரிப்பு, சமூக நலச் சேவைகளில் என்ன விளைவினை ஏற்படுத்தும்? உதாரணம் தருக. **(10 புள்ளிகள்)**

iii. உள்ளூர் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்குரிய நான்கு உபாயங்களைச் சுருக்கமாக விளக்குக. **(08 புள்ளிகள்)**

**(மொத்தம் 30 புள்ளிகள்)**

**Q3.**

i. மக்களின் கருத்துச் சுதந்திரத்தில் சமூக ஊடகங்கள் ஏற்படுத்தும் தாக்கம் யாது? **(04 புள்ளிகள்)**

ii. சமூக நல்லுறவினைக் கட்டியெழுப்புவதில் கல்வி நிறுவனங்களின் வகிபாகம் என்ன? **(04 புள்ளிகள்)**

**iii.** 'சமமற்றவர்கள்' சமமாக நடத்தப்படல் வேண்டுமா? அல்லது அசமமாக நடத்தப்படல் வேண்டுமா? உமது விடையைத் தர்க்கரீதியாகப் பரிசீலிக்குக. **(10 புள்ளிகள்)**

iv. முரண்பாட்டுத் தீர்வுகளில், அனுசரணையாளரின் பங்கு யாது? **(04 புள்ளிகள்)**

v. நீர் உம்மை ஓர் அனுசரனையாளரெனக் கருதுக, முரண்பாட்டுத் தீர்வுகளில் சிறந்த மாற்றுத்தெரிவுகளைத் தெரிவு செய்வது தொடர்பில், திறத்தவருக்கு நீர் வழங்கக்கூடிய ஆலோசனைகள் எவை? **(08 புள்ளிகள்)**

**(மொத்தம் 30 புள்ளிகள்)**

**Q4. பின்வருவனவற்றுள் யாதாயினும் ஐந்து (05) வினாக்களுக்கு மாத்திரம் சுருக்கமாக விடை தருக.**

**i.** கல்வியின் மூலம் மாணவர்களைச் சமூகமயப்படுத்தல்.

ii. இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி.

iii. இலங்கையின் அரசியலமைப்பில் பௌத்தமயமாக்கலுக்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமை

iv. விவாகரத்துக்கான காரணிகள்.

v. பெண்களுக்கெதிரான வீட்டு வன்முறைகள்.

vi. அரசாங்கத்தின் புதிய வரவு செலவுத் திட்டம்.

**(மொத்தம் 5×5 = 25 புள்ளிகள்)**